எம்.சி.ஓ.பி எண்: 61/2018 தேதி: 22.01.2025

மசா. : 1

பெயர் : சுகாசினி

க /பெ. : வினோத்பாபு

வயது : 32

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 7 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் தான் இருசக்கரவாகனத்தை ஓட்டிச்சென்றேன் என்றால் சாி. என் கணவா்தான் புகாா் கொடுத்துள்ளாா் என்றால் சாி. என் கணவா் விபத்தை நோில் பாா்க்கவில்லை என்றால் சாி. அந்த புகாாில் நான் வேலை பாா்ப்பதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சாி. நான் ஓட்டிச்செ சன்ற வண்டி என் மாமனாருக்கு சொந்தமானது. என்னுடைய ஓட்டுநா் உாிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாி. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் மற்றும் ஓட்டுநா் உாிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியது தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நான் டெய்லாிங் கற்றுக்கொண்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. **வயது, தொழில், வருமானம் மற்றும் வருமான இழப்பை** காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான்தான் ஓட்டுநா் உாிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கி என்னுடைய அஜாக்கிருதையால் இந்தவிபத்து நடந்துள்ள காரணத்தால் மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சாியல்ல. முதலாம் எதிா்மனுதராரா் வாகன ஒட்டி ஓட்டுநா் உாிமம் இல்லாமல் காப்பிட்டு விதிமுறைகளை மீறி வாகனத்தை

ஒட்டியுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சாியல்ல. மசாஆ 3 தவிர வேறு சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சாி. இந்த விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்டன என்றாலும் எனக்கு எந்த இயாலமை இல்லை என்றாலும் காயத்தின் தன்மையை மிகைப்படுத்தி கூறிகிறேன் என்றால் சாியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல.

x

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.